**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி.

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 21 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.92/2025**

**TNTL06-000082-2025**

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுகா, பேட்டை, சேரன்மகாதேவி ரோடு, அறிவுத்திருக்கோயில், வேதாத்திரி பவன், கதவு எண்.94-E யில் இயங்கி வரும், G.P.பைனான்ஸ் நிறுவனத்திற்காக அதன் நிர்வாக பங்குதாரரான லேட்.கணபதியாபிள்ளை அவர்களின் குமாரர் இந்து வயது 59 உள்ள G.ஆறுமுகம் மூலம் . . . வாதி

//எதிர்//

திருநெல்வேலி தாலுகா, சுத்தமல்லி கிராமம், காவல்நிலையம் எதிரில், கதவு எண்.1/5, பூங்காநகரில் குடியிருந்து வரும் முத்துகுட்டி அவர்களின் குமாரர் இந்து வயது சுமார் 50 உள்ள M.கணேசன் . . . பிரதிவாதி

இந்த வழக்கானது, வாதி நிறுவனத்திற்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன்பாக்கித்தொகை ரூ.62,500/- அசல் பாக்கி ரூ.50,000/- மற்றும் வட்டியுடம் சேர்த்து செலுத்த கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | - 24.02.2025, 05.03.2025, 14.03.2025. |
| வழக்கு மூலம் | - 03.03.2022, 03.01.2025, 08.01.2025 ஆகிய தேதிகளில் திருநெல்வேலி பாளையங்கோட்டை தாலுகாவில் வைத்து உற்பத்தி. |

வாதி தங்கள் தாவாவை அதிகார வரம்பிற்காக நீதிமன்ற முத்திரைக்கட்டணத்திற்காக வை பரிகாரத்தை ரூ.62,500/- ஆக மதிப்பீடு செய்து அதற்காக தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணம் வழக்கு மதிப்பீடு சட்டம் 14/1955 மற்றும் சீர்திருத்த சட்டம் 13/2017 ன் பிரிவு 22 ன்

படி ரூ.1,875/—க்கு நீதிமன்ற முத்திரைக்கட்டணம் இத்துடன் செலுத்தியுள்ளார்.

இந்த வழக்கானது, 21.07.2026 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.திலக், அவர்கள் ஆஜராகி, மெமோ தாக்கல் செய்ததின் அடிப்படையில், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்பாணை

**1) வாதி தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் நீதிமன்றத்திற்கு வெளியே சமரசமாக தீர்வு காணப்பட்டுவிட்டதால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்படுகிறது.**

**2) வாதி சட்டம் அனுமதிக்கும் நீதிமன்ற முத்திரை கட்டணத்தை திரும்ப பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.**

**3) செலவு தொகை குறித்து உத்தரவு இல்லை.**

2026ம் ஆண்டு ஜூலை 21ம் நாள் என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd /— R.M.Marimuthu
1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1வது கூ.மா.உ.நீ. திலி
அ.வ.எண். 92/2025
தீர்ப்பாணை
நாள். 21.07.2026